Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-3
{ பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0
{ வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 13-7-1946 ஆனி௴ 29உ { மலர் 40

# பெரியார் வழியைப் பின்பற்றுங்கள்


## ஆரியம் அலறிக்கொண்டு ஓடும்

16-6-46ல் ஈரோடு நாகம்மையார் பந்தலில் நடைபெற்ற, கோவை மாவட்ட திராவிடர் மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் எம். கே. குகநாதன் அவர்கள் ஆற்றிய வரவேற்புரை:-

திராவிடத்தந்தை பெரியார் அவர்களே! இளைய பட்டக்காரர் அவர்களே! தாய்மார்களே!! தோழர்களே!!

இம்மாநாட்டு வரவேற்புக் கழகத்தின் சார்பாக உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன். சென்ற மாதம் மதுரை மாநாட்டுக்கு முன்பதாக நாங்கள் ஈரோட்டில் "தாலூக்கா திராவிடர் மாநாடு" நடத்துவதென தீர்மானித்து அதற்கான முறையில் தான் எல்லா ஏற்பாடுகளும் செய்து வந்தோம். ஆனால் மதுரையில் எதிரிகள் மூட்டிய தீயினால் நம் தோழர்களின் ரத்தம் கொதிப்படைந்திருப்பதினால் இனி நம் கடமை என்ன? என்பது பற்றி மாவட்டந்தோறும் மாநாடுகள் கூடி முடிவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே நாங்கள் கூட்டவிருந்த தாலூக்கா மாநாட்டையே ஒரு வாரம் தள்ளி வைத்தாவது கோவை மாவட்ட மாநாடாக நடத்தி விடுவதென்ற முடிவிற்குவந்து மிக அவசர அவசரமாக இம்மாநாட்டைக் கூட்டியிருக்கிறோம்.

மத்திய திராவிடர் கழகத்திற்கு நிதி திரட்டவேண்டிய மிக முக்கியமான கடமை நம் முன்பு இருப்பதினால் இம்மாநாட்டுக்கென யாரிடமும் சென்று அதிகத்தொகையொன்றும் வசூல் செய்யாமல் 100, 200 என்று தாராளமாகக்கொடுப்பவர்களிடம்கூட 10, 20 ரூபாய்போதுமென்றே வசூலித்திருக்கிறோமாதலால் இம்மாநாட்டுக்கு வந்திருக்கும் பிரதிநிதிகளுக்குப் போதுமான அளவு வசதிகள் செய்யமுடியாமைக்கு மன்னிப்பீர்களென்று நம்புகிறேன்:



M. K. குகநாதன்

இனி விஷயத்திற்குச் செல்வோம் நம் திராவிடர் கழகமாகிய ஜஸ்டிஸ் கட்சி இந்நாட்டில் தோன்றிய நாள் தொட்டு இந்நாட்டுப் பார்ப்பனர்கள் நம் கட்சிமீது எத்தனையோவிதமான பழிகளைச் சுமத்திப் பார்த்தார்கள். அவர்களுக்கு இருக்கிற பத்திரிகை பலத்தினாலும், பிரசார பலத்தினாலும் பொதுமக்களும் நம்மீது துவேஷம் கொள்ளும்படி செய்துவந்தார்கள். பார்ப்பனர்கள் நம்மை பட்டம், பதவி ஆசை பிடித்தவர்கள் என்றும், ஆங்கிலேயரின் அடிமை என்றும், ஜமீன்தார்களின் தொங்கல்களின் கட்சி என்றும், வகுப்பு வாதிகளென்றும், தேசத் துரோகிகள் என்றும், நாஸ்திகர்கள் என்றும் இன்னும் என்னென்னவெல்லாமோ சொல்லிப் பார்த்தார்கள்.

ஆனால் திருச்சி மாநாட்டுக்குப் பின் பார்ப்பனர்கள் வாய் அடைத்துப் போய்விட்டது. ஏனென்றால், பட்டம், பதவிக்காரர்கள் நம் கட்சியில் இல்லை; ஜமீன்தார்களின் தொங்கல்களும் இல்லை. ஆரியர்களை மட்டும் நாங்கள் எதிர்க்கவில்லை; திராவிடர்களாகிய எங்களுக்கு ஆரியர் முதல் எதிரி; பனியாக்கள் அடுத்த எதிரி; ஆங்கிலேயர் மூன்றாவது எதிரி என்பது மட்டுமல்ல; ஆரியர்களும், பனியாக்களும் எங்கள்மீது ஆதிக்கம் செலுத்த உடந்தையாகவும் உதவியாகவும் இருக்கும் ஒருபெரிய குற்றவாளி என்று கூறிவிட்டோம். கடவுளை நிந்திக்கும் கயவர்கள் நாங்களல்ல. கடவுளின் பேரால் கண்ட கண்ட கதைகளை எழுதி வைத்துக்கொண்டு கடவுளை மிகக் கேவலமாகவும் இழிவாகவும் கூறி வயிறு வளர்க்கும் வஞ்சகர்களைத்தான் கண்டிக்கிறோமே தவிர மற்றபடி நாங்கள் நாஸ்திகர்கள் அல்ல என்று தெளிவுபடுத்திவிட்டோம். எனவே ஒரு வழியிலும் நம் மீது பழி சுமத்த வழியில்லாமல் போய்விடவே கடைசி ஆயுதமாக பார்ப்பனர்கள் மதுரையில் காலித்தனத்தைக் கைக்கொண்டு விட்டார்கள். இதனால் அவர்கள் சமூகத்திற்கு ஒன்றும் ஆள் நஷ்டம் இல்லை. நமக்குள்ளாகவே அவர்கள் சொல்படி கேட்கும் ஆள்களைக்கொண்டு நம்மைத் தாக்குவதனால் ஏற்படும்

பக்கம் ஆள் நஷ்டப்பட்டாலும் மொத்தத்தில் அவர்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) லாபமேதான். இந்த முறையைத்தான் ராமாயணம் அவர்களுக்குப்போதிக்கிறது. எப்படியென்றால், ராமன் தன் சொந்தப் படைகளுடன் இலங்கை செல்லவில்லை. தென்னாட்டிலே இருந்த சுக்ரீவனையும், அனுமானையும், அவர்களது படைகளையும் கொண்டுதான் தென்னிலங்கை வேந்தன்மீது போர் துவக்கினான். அதற்கு அனுகூலமாக இலங்கையிலும் ஐந்தாம்படையாக விபீஷணன் இருந்தான். வெற்றி கொண்டான் ராமன். இதில் எந்தப்பக்கத்துப்படை சேதமானாலும் ராமனுக்கு என்ன நஷ்டம், அல்லது கவலை இருக்கமுடியும்? அதுபோலவேதான் பார்ப்பனர்களுக்கு இப்பொழுது சில சுக்ரீவன்கள், அனுமார்கள் துணை இருக்கிறார்களென்ற தைரியத்தையும், போதாக்குறைக்கு நம் உடன்பிறந்த இரண்டொரு விபீஷணர்களும் மறைமுகமாக உதவி புரிகிறார்கள் என்ற நம்பிக்கையையும் வைத்துக்கொண்டுதான் இந்த இழிவான காரியத்தில் இறங்கியிருக்கிறார்கள் என்று கருதவேண்டியிருக்கிறது.

இந்த நிலையில் நாமும் இராவணனைப்போல் எய்தவனிருக்க அம்புடன் சண்டையிட்டுச் சாவதா? அல்லது ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தையும் காட்டி அடிவாங்கிக்கொண்டு வாழ்வதா? அல்லது சுக்ரீவர்களும், அனுமார்களும் நம்மைத்தாக்கினால் நாம் அவர்கள் விஷயத்தில் கோபங்கொள்ளாது அவர்களின் எஜமானர்களான பார்ப்பனர்களுக்குப் புத்தி புகட்டுவதா? புத்தி புகட்டுவதென்றால் எந்த முறையில்? என்பவைகளையெல்லாம் நாம் தீர ஆலோசித்து ஒரு உறுதியான முடிவிற்கு வரவேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஏன் இவ்வாறு கூறுகிறேன் என்றால் உண்மையிலேயே பார்ப்பனர்களின் நிலை சீர்குலைந்து வருவதைப் பார்ப்பனர்கள் உணர்கிறார்கள். பார்ப்பனர்களின் ஏகபோக ஸ்தாபனமாய் விளங்கிய காங்கரசிலும் பார்ப்பனர்களுக்கு ஆட்டம்கண்டுவிட்டது. பார்ப்பனர்கள் இப்பொழுது இரட்டை வெட்டில் சிக்கிக்கொண்டு விழிக்கிறார்கள். அதாவது தமிழ்நாடு காங்கரசில் ஏற்பட்டுள்ள பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் போராட்டத்தைத் தடுப்பதற்காக மேலிடத்தாரின் தயவைக்கொண்டு நடவடிக்கை எடுக்கலாமென்றால் தமிழ்நாடு காங்கரஸ் அகில இந்திய காங்கரஸ் தொடர்பை அறுத்துக்கொண்டுவிடும்; அவ்வாறு ஏற்பட்டுவிட்டால் பிறகு தமிழ்நாட்டில் காங்கரசே திராவிடர் கழகம்! திராவிடர் கழகமே காங்கரஸ்! என்ற நிலை ஏற்பட்டுவிடுமே என்ற அச்சம் ஒருபுறமும், எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலிருந்தால் நாளாவட்டத்தில் தமிழ்நாடு காங்கரசில் பார்ப்பனர்களுக்கே இடமில்லாமல் போய்விடுமே என்ற திகில் ஒருபுறமும் வாட்டிக்கொண்டிருப்பதால்தான் எப்படியாவது முதலாவது வேலையாக திராவிடர் கழகத்தார் மீது காங்கரசிலுள்ள பார்ப்பனரல்லாதார்களை ஏவிவிட்டு அதன்மூலம் ஏதாவது வெற்றிபெற முடியுமா என்ற வேலையில் பார்ப்பனர்கள் இறங்கியிருப்பதாகத் தெரிவதால்—காங்கரசிலுள்ள பார்ப்பனரல்லாத தோழர்கள் அதைப்பற்றி அவ்வளவு தூரம் சிந்திப்பார்களென்ற நம்பிக்கைக்கும் இடமில்லாமலும் இருப்பதால்தான் நாம் நன்கு சிந்தித்து பார்ப்பனர்களது எண்ணத்தில் மண்போடவேண்டியதுடன் இனி ஒருநாளும் திராவிடர்களைப் பிரித்து ஆளமுடியாது என்ற உண்மையை ஆரிய—பனியா—ஆங்கிலேயக் கூட்டாளிகளுக்கு எடுத்துக்காட்டவேண்டிய பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

இந்நிலையில் திராவிடர்களாகிய நமது கடமை ஒன்றே ஒன்றுதான். அதுதான் நமது தலைவர் பெரியார் அவர்கள் மீது பூர்ணநம்பிக்கை வைத்து—ஏன்? நமது சொந்தப்புத்திகளையெல்லாம்கூட அவரிடம் "காணிக்கை"யாகக் கொடுத்துவிட்டு—அவர் சொல்படி நடக்கவேண்டியது என்பதேயாகும்.

என்றைக்கு திராவிடமக்கள் அனைவரும் பெரியார் அவர்கள் தலைமையின் கீழ் இருக்கிற நிலை ஏற்படுகிறதோ அன்றே—அந்த நிமிஷமே இந்த நாட்டைவிட்டு ஆரியம் அலறிக்கொண்டு ஓடும்! அந்த நன்னாளை விரைவில் காண வழி வகைசெய்து தொண்டாற்ற முன்வரவேணுமாய்க் கேட்டுக்கொண்டு மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவருக்கும் நல்வரவு கூறுகிறேன்.

## "சூறாவளி"

பெரியார் மலர். பெரியாரின் பிறந்தநாளன்று (17-9-46) வெளிவருகிறது. தன்மான இயக்கத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களுடைய கட்டுரைகள், கவிதைகள், புகைப்படங்கள் இடம் பெறுகின்றன.

விலை ரூ 1-0-0 தபால்செலவு அணா 3. விற்பனையாளர்கள் தேவைக்கு எழுதுக. விபரங்களுக்கு:

"சூறாவளி" காரியாலயம்,
திருமலைராயன்பட்டினம்,

## "திராவிடநாடு"

காஞ்சிபுரத்தில் 13, 14 தேதிகளில் நடைபெற இருக்கும் மாநாட்டு வேலையில் அலுவலகத்தார் ஈடுபட்டிருப்பதால், 14ந் தேதியில் "திராவிடநாடு" வெளிவருவதற்கில்லை; அன்பர்கள் பொறுத்தருள்க. 21-7-46ல் "திராவிடநாடு" கவிஞர் காணிக்கையாக, ஏற்கனவே அறிவித்துள்ளபடி வெளிவரும் என்று திராவிடநாடு மானேஜர் அறிவிக்கின்றார்.

## பிறப்பு

திருநெல்வேலி ஜில்லா உத்தபாண்டியன்குளம் தோழர் த. மாடசாமி அவர்களின் குமாரரும் எமது மூத்த சகோதரருமாகிய தோழர் த. மா. சுப்பையா அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி ப. சு. சிவகாமி அம்மாளுக்கு ஷை ஜில்லா இராமானுஜம் புதூரில் 27-4-46 சனிக்கிழமை இரவு 8½ மணிக்கு பெண் குழந்தை பிறந்தது. தாயும் மகளும் நலமாயிருக்கின்றனர். 22-5-46ல் குழந்தைக்கு "சுசிலா தேவி" எனப் பெயர் சூட்டப்பட்டது. ஷை வைபவத்தில் கலந்துகொண்டவர்களுக்கு எங்களின் மனப்பூர்வமான வணக்கத்தை இதனால் தெரிவித்துக்கொள்கின்றோம்.

த. மா. சுப்பையா
த. மா. செல்லையா

"குடி அரசு" வளர்ச்சிக்கு ரூபாய் இரண்டு அளிக்கப்பட்டது.

# திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்

23-6-48ல் காலை 10மணிக்கு சென்னை சிந்தாதிரிப்பேட்டை 'விடுதலை' காரியாலயத்தில் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டம், கமிட்டித் தலைவர் தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமையில் கூடியது. கூட்டத்திற்கு தோழர்கள் பெரியார் ஈ. வெ. ரா., டி. பி. வேதாசலம், பா. சிதாபதி, ஏ. சித்தையன், ரோ. சு. அருணாசலம், பாரங்குசம், டி. ரங்கராசு, கே. கோவிந்தசாமி, பி. பொன்னுசாமி, என். வி. நடராசன், சி. தங்கராஜ், வி. சின்னத்தம்பி, சி. முனுசாமி, எம். ஆர். சித்தையன், வே இ. திருநாவுக்கரசு, அ. திராவிடமணி, கே. ஏ. மணி ஜி. பி. சோமசுந்தரம், ராமசுப்பையா, சி. டி. டி. அரசு, சி. வி. எம். அண்ணாமலை ஆகியோர் வந்திருந்தனர்.

தோழர்கள் அண்ணாமலையும், அரசு அவர்களும் செங்கற்பட்டுக்கும், சென்னைக்கும் பிரதிநிதிகளாகப் புதிதாகச் சேர்க்கப்பட்டனர்.

நிதி வசூல் சம்பந்தமாகப் பேசப்பட்டபின்னர், கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. மெடிகல் காலேஜ்களிலும், என்ஜினீயரிங் காலேஜ்களிலும் 100க்கு 20வீதம் உயர்ந்த மார்க் வாங்கினவர்களையேசேர்ப்பதென்பது வகுப்புவாரியாக சேர்க்கும் நியதியையும் ஒழிப்பதாகுமாதலால் பொதுமக்கள் வரிப்பணத்தால் நடத்தப்படும் அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் இவ்வித அநீதி செய்யப்படுவதை திராவிட கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

2. நான்கு ஜில்லாக்களில் மட்டும் மதுவிலக்கு செய்ய காங்கரஸ் மந்திரிகள் தீர்மானித்து அமுலுக்கு கொண்டுவருவதானது உண்மையான மதுவிலக்காகாதென்றும், மாகாண முழுவதும் மதுவிலக்கு கொண்டுவர போதிய பணவசதிக்காக விற்பனை வரி போட்டிருப்பதாலும், அந்த வரியை ஆலோசனையாளர் அரசாங்கம் செய்திருப்பதாலும், ஏராளமான பணம் இதன்மூலம் சேர்ந்திருப்பதாலும், மாகாண முழுமைக்கும் மதுவிலக்குக் கொண்டுவரவேண்டுமேயல்லாது நான்கு ஜில்லாக்களில் மட்டும் கொண்டுவருவதை இக்கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

3. சமீபகாலமாக அடிக்கடி மதுரை நகரத்தில் காங்கரஸ்காரர்கள் குழப்பங்கள்செய்து பொருள் சேதமும் உயிர்ச்சேதமும் உண்டுபண்ணி வதை பொதுமக்கள்மீது பழிசுமத்தி வருவது கண்டு இக்கழகம் வருந்தி, அரசாங்கத்தார் இதை கவனித்து இதை அடியோடு கவனிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்வதுடன் முடியாமற்போனால் தண்டப்போலீஸ் நியமிப்பதன் மூலமாவது பொதுஜன அமைதியும், பாதுகாப்பும், மதுரை நகரத்தில் உண்டுபண்ணவேண்டுமென தெரிவித்துக்கொள்கிறது. செய்யாவிட்டால் மாகாணத்தில் ஒரு முக்கிய நகரத்தின் பெருக்கும், நகர மக்கள் சுகவாழ்விற்கும் கேடு வருமே என வருந்துகின்றது.

4. மாகாண கருப்புச்சட்டை மாநாட்டில் நடந்த கலவரம்பற்றி விசாரிக்க வெளியூர் சாட்சிகள் பலர் வரவேண்டியிருப்பதால், சமீபகாலமாய் மதுரைநகரில் பல கலவரங்கள் நடப்பதால் அதை தக்கமுறையில் அடக்க சர்க்காரால் முடியாமற்போவதால், டை விசாரணைக்கு சாட்சி சொல்ல வருபவர்கள் பலவித இன்னல்களுக்கு உட்படவேண்டியிருக்குமாகையால் டை விசாரணையை மதுரை ஜில்லா நீங்கலாக வெளி ஜில்லாவில் நடத்துமாறு வேண்டிக்கொள்கின்றது.

5. சென்னை கவர்னரால் பிரசுரிக்கப்பட்ட Pawn Brokers, Act (மார்வாரி சட்டம்) சீக்கிரம் சட்டமாக்கி காங்கரஸ் மந்திரிகள் மாகாணத்தில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமாய் இக்கழகம் தீர்மானிக்கிறது.

6. இண்டியில் நடக்கும் குதிரைப் பந்தயத்தில் ஏழை மக்கள் பெரும் பணங்களை இழந்து வருவதால் காங்கரஸ் மந்திரிசபை சட்டமூலம் டை குதிரைப் பந்தயத்தை நிறுத்த வேண்டுமென்று இந்த கழகம் வற்புறுத்துகின்றது.

7. சென்னை பக்கிங்ஹாம் கர்னாடிக் மில் தொழிலாளிகள் வேலை நிறுத்தத்தில் டை தொழிலாளிகள் கோரிக்கை நியாயமாய்ப் படுவதால் மில் முதலாளிகள் அதற்கு இணங்கும்படியும் தொழிலாளர்கள் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளுகின்றது.

## மதிப்புரை

### "தமிழ் முரசு"

தோழர் ம. பொ. சிவஞான கிராமணியார் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'தமிழ் முரசு' என்ற திங்கள் வெளியீடு நமது பார்வைக்கு வந்தது. 'தமிழகத்தில் தமிழரசு' என்ற கிராமணியாரின் கட்டுரையில், அவரின் நாட்டுப்பற்றும், இனப்பற்றும், சீர்திருத்தக்கொள்கையும நன்கு விளங்குகின்றன.

கிராமணியார் காங்கரஸ் இயக்கத்தைச் சார்ந்தவரெனினும் தேசியத்தால் தமிழர்களுக்கும், தமிழ் மொழிக்கும் வந்த இடையூறுகளை வன்மையாகக் கண்டிக்கிறார். மதம், கடவுள், புராணம் ஆகியவற்றால் தமிழர்களின் நிலை சீர்குலைந்ததுள்ளதைக் கண்டித்தும், வருங்காலத்தில் தமிழ நாட்சி தனித்தியங்க வேண்டுமென்று வற்புறுத்தியும் விளக்கமாக எழுதியுள்ளார். திரு வி. க, மு. வரதராசனார் போன்ற தமிழ் அறிஞர்களும் அரிய கட்டுரைகள் எழுதியுள்ளனர். 'தமிழ் முரசு' என்னும் மாத வெளியீட்டைப் பலரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்பது நமது விருப்பம்.

கிடைக்குமிடம்:-
தமிழ் முரசு பதிப்பகம்,
233, லிங்கிசெட்டித் தெரு,
ஜி. டி. சென்னை 1.

### தளபதி அண்ணாவின் பேட்ஜ்

திராவிடத்தளபதி அண்ணாதுரை எம். ஏ., அவர்களின் பேட்ஜ் ஒன்று கைவரப்பெற்றோம். அதில் அண்ணாவின் முகம் "சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை"யை ஒத்திருக்கின்றதெனின் மிகையாகாது.

விலை: 100-பேட்ஜ் 17-ரூபாய்தான்.

கிடைக்குமிடம்:-

S. M. Kandaswamy,
Leaders Lockets & Photos,
Sole Agent, Dharavi, Bombay. 17.

குடி அரசு

1946-ஆம் ஜூலை-மீ 13உ.

# இதுதானா சுயராஜ்ஜியம்?

தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் மந்திரிகளாய் ஆட்சி நடத்துவதால் இந்நாட்டில் ஜனநாயகத்தின் ஆட்சி நடைபெறுவதாகவும், ஜனங்களின் பிரதிநிதிகளாய் இருந்து தாங்கள் ராஜரீகம் செய்வதாகவும், மந்திரிகள் ஜம்பமாகவும், ஆணவமாகவும் பேசிக் கொள்ளுகிறார்கள். இதற்குப் பெயர் அரை சுயராஜ்யம், முக்கால் சுயராஜ்யமென்றும், கவர்னர் போய்விட்டால் முழு சுயராஜ்யம் என்றும், இதோ அதோ வரப்போகிறது பூரண சுயராஜ்யம் என்றும் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் நடப்பது என்ன? மந்திரிகளின் சுற்றுப்பிரயாணம், விருந்து, களியாட்டம் சுயநலப்பேய்களின் கட்டியம் கூறுதல் ஒருசிலர் தங்கள் நலத்துக்குச் சௌகரியம் செய்து கொள்ளுதலல்லாமல் வேறு ஏதாவது நடக்கிறது என்று சொல்ல வகையற்ற காரியங்கள்தான் நடக்கின்றன. ஏதாவது வேறு காரியமும் நடக்கிறது என்று சொல்லப்படுமானால் அது பார்ப்பனர்களுக்குப் பயனுள்ளதும், திராவிடர்களுக்குக் கேடு பயப்பதுமே யாகும் என்று சொல்லலாம். இவையே மந்திரிகள் செய்கையாக இருந்து வருகின்றன. நாட்டில் நடப்பதோ என்றால், எங்கும் காலித்தனங்களும், போக்கடாத்தனங்களும், தலைவிரித்து ஆடுகின்றன என்பதல்லாமல்வேறொன்றும் அறியக்கூடவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

சுயராஜ்யம் என்றால் காலித்தனம் என்பதும், அதுவும், காங்கரஸ் சுயராஜ்யம் என்றால் சுத்தக் காலாடித்தனம், போக்கிரித்தனம், போக்கடாத்தனம் என்பதுமாகவே ஆகிவிட்டது.

காங்கரஸ் மந்திரிகள் பதவிக்கு வந்ததான் முதல் திராவிடநாட்டில், சிறப்பாகத் தமிழ்நாட்டில் ஏறக்குறைய நாள்தோறும், வாரந்தோறும் காலாடித்தனம் நடந்த வண்ணம் இருக்கிறது. மதுரையில் மாத்திரம் இந்த இரண்டுமூன்று மாதத்தில் 10, 15 காலாடித்தனங்கள் நடந்துவிட்டன. மற்றபடி திருநெல்வேலி, ராமநாதபுரம், சேலம், திருச்சி, கோயமுத்தூர், சென்னை முதலிய ஜில்லாக்களில் பல நடந்துவிட்டன. மற்றும் அநேக ஊர்களிலும் நடந்தவண்ணம் இருக்கின்றன. 10, 20 கொலைகளும், 100, 200 பேர்களுக்கு மேல் காயங்களும், 500, 1000 பேர்களுக்கு அடி, உதை, கல்லடி, குத்துகளும், 1,00,000, 2,00,000 பெறும்படியான சாமான்கள், கட்டடங்கள், மருதிகள், கடைகள் நாசமும் நடந்திருக்கின்றன. இவை யாவும் காங்கரஸ்காரர்களாலும், கம்யூனிஸ்ட்டுகளாலும் என்பதல்லாமல் முஸ்லிம்களாலோ, திராவிடர் கழகத்தாராலோ, ஷெடியூல் வகுப்பார்கள் என்பவர்களாலோ நடத்தப்பட்டன என்று சொல்வதற்கு இல்லாமல் இருப்பதோடு, இந்த மூன்று கூட்டத்தாரே காலிகளால் மேற்கண்ட மாதிரியான துன்பம், தொல்லை, நட்டம் அடைந்தார்கள் என்று சொல்லும்படியாக இருக்கிறது. இதுதானா சுயராஜ்யம்? என்று கேட்கிறோம்.

காங்கரஸ்காரர்கள் தங்களுக்குச் சம்பந்தமில்லை என்று சொல்லலாம். ஆனால் வேறு யார் என்று கேட்கிறோம். காங்கரஸ்காரர்கள் தாங்களே இந்த நாட்டுக்குப் பிரதிநிதியென்றும், இந்த நாட்டு மக்கள் யாவரும் காங்கரஸ்காரர்கள், காங்கரசை ஆதரிக்கிறவர்கள் என்றும் சொல்லுகிறபோது இந்த காலிகள் மாத்திரம் வேறு யாராய் இருக்கமுடியும் என்று கேட்கிறோம்.

வேறு யாரோ இந்தக் காலித்தனம் செய்வதாகச் சொல்லுவார்களேயானால் காங்கரஸ்காரர்கள் இந்தக் காலித்தனத்துக்கு என்ன பரிகாரம் செய்தார்கள்.

உண்மையாக இம்மாதிரியான ஈனக் காரியங்களுக்கு மந்திரிகள், ஜனநாயக மந்திரிகள் பங்காளிகளாகவோ, உளவாகவோ இல்லாமல் இருப்பார்களானால் இவர்கள் பதவிக்கு வந்ததுமுதல் தொடர்ந்தாப் போல் இந்தப் பாண்டிச்சேரி காரியம் நடந்திருக்கமுடியுமா? என்று கேட்கிறோம்.

ஆட்வைசர் சர்க்காரில், ஜஸ்டிஸ் சர்க்காரில் இப்படி நடந்திருந்தால் அவர்களை காங்கரஸ்காரர்கள் என்ன சொல்லி இருப்பார்கள்? தண்டப்போலீசுவை, 'ராணுவ ஆட்சிநடத்து' என்று சொல்லமாட்டார்களா? ஒரு பார்ப்பனனுக்கு இம்மாதிரி அடிபட்டு, ஒரு பார்ப்பனர் அடி, குத்து, சுடுபட்டுச்செத்து, ஒரு பார்ப்பனரின் கட்டடம் ஓட்டல், பத்திரிகாலையம் இடிக்கப்பட்டு, கொளுத்தப்பட்டு இருக்குமானால் இன்று இந்த மந்திரிகள் என்ன செய்வார்கள்? எவ்வளவு பேசுவார்கள்? எந்த மந்திரியாவது இவ்வளவு காலித்தனத்துக்கும் வாயைத் திறந்தாரா? இப்படி நடப்பது அயோக்கியத்தனம்; இப்படி யாரும் செய்யக்கூடாது என்று ஒரு அறிக்கையாவது, ஒரு அறிவுரையாவது வெளி

யாக்கினார்களா? மக்களின் கண்ணைக் குத்துவதும், காலை வெட்டுவதும், மசூதியை இடிப்பதும், கடைகளைச் சூறையாடுவதும் தெரிந்தபிறகும், எந்த மந்திரியாவது காங்கரஸ்காரர்களுக்கோ, பொதுமக்களுக்கோ இது கூடாது என்று எச்சரிக்கை செய்தார்களா? விசாரணை என்று மக்களை ஏய்க்கிறார்கள்! ஸ்தல பார்ப்பனர்கள் சொல்லுகிறபடி ஆடுகிறார்கள் மந்திரிகள்.

எனவே,

இதை இனி நம்மால் சகிக்க முடியாது! இந்த நிலையில் இதுவரை நடந்த அயோக்கியத்தனங்களுக்கு, அடாத காரியங்களுக்கு மந்திரிகளே பொறுப்பாளிகளாவார்கள்; அவர்களே தக்கபடி புத்தி கற்பிக்கப்படவேண்டியவர்களாவார்கள். இதற்காக எச்சரிக்கை செய்கிறோம்.

இன்றுமுதல் 15நாள்களுக்குள் மந்திரிகள் வருந்த, காலிகளுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும். அதிகாரிகளுக்கு இவைகளை அடக்கும்படி கண்டிப்பான அறிக்கை விடவேண்டும். காலித்தனம் நடந்த ஊர்களில் இருந்த அதிகாரிகளை மாற்றிவிட்டு தக்க திராவிட அதிகாரிகளைப் போடவேண்டும். காலித்தனங்கள் நடந்த இடங்களுக்கு, தனி டிடெக்டிவ் அதிகாரிகள் போட்டு நடவடிக்கை எடுக்கச் சொல்லவேண்டும்.

இவை நடக்காத பட்சம் முஸ்லிம்கள், திராவிடர்கள், ஆதிதிராவிடர்கள் என்பவர்கள் ஒரு தனி மாநாடுபோட்டு பரிகாரம் கண்டுபிடித்து நடைமுறையில் கொண்டுவர வேண்டியது அவசியம் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## பிறப்பு

நம் தோழர் என். அர்ச்சுனன் அவர்களின் சகோதரரும், பழைய கோட்டைப் பட்டக்காரருமான திருவாளர் என். நல்லசேனாதிபதி சர்க்கரை மன்றாமயார் அவர்கட்கு 10-7-46ம் தேதி இரவு 10-55 மணிக்கு ஆண்மகவு பிறந்திருக்கிறது என்பதை மனமகிழ்ச்சியுடன் பெத்தாம்பாளையம் தோழர் பி. பழனிச்சாமி தெரிவித்துக்கொள்ளுகிறார்.

## பெயர் மாற்றம்

தோழர் ஆ. திராவிடமணி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் ப. அமராவதி அவர்கள் தமது பெயரை "தமிழரசி" என்று மாற்றிக்கொண்டார்கள்.

## கழகம் அமைத்தார்கள்

15-6-46ல் சின்னாளப்பட்டியில் தோழர் போழி அவர்கள் தலைமையில் கூடிய திராவிட கழகக்கூட்டத்தில் தோழர்கள் ஆர். போழி, எஸ். ஆர். பி. ராமசாமி, டி.கே. கனகசபாபதி, எஸ். ராமையா, வி. நடராசன் ஆகியோர் முறையே தலைவர், செயலாளர், உபதலைவர், உபசெயலாளர், பொருளாளராகவும், மற்றும் எஸ். சேதுபதி, வி. ஜெகநாதன், பி. அரிராய், டி. எம். கந்தசாமி, பி. கந்தசாமி, எஸ். சண்முகம் ஆகிய நிர்வாக உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

o o

9-6-46ல் திருப்பூரில் ஆதிதிராவிடர் வாலிப முன்னேற்றச் சங்கக் கமிட்டிக் கூட்டம் தோழர் கே. லெட்சுமணன் தலைமையில் கூடிற்று வெளவால்டித்தோழர் ஷம்சுதீன் பேசியபின் ஷை சங்கத்தைத் திராவிடர் கழகமாக மாற்றி ஈரோட்டுத் தலைமைக் கழகத்தோடு இணைத்துவிடத் தீர்மானிக்கப்பட்டது என்ற தோழர்கள் கே. லட்சுமணன், எஸ். முத்தையா ஆகியோர் அறிவிக்கின்றனர்.

o o

18-6-46ல் காயல் பட்டணத்தில் தோழர் கே. கே. எஸ். சாயபு தம்பி அவர்கள் தலைமையில் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது. எம். ஆ.நாஸ், எஸ். எம். கே. இ. கபீர், எஸ். சிவசங்கு ஆகிய தோழர்கள் திராவிடர் கழகம்பற்றி பேசினார்கள். தோழர் ஆர். வி. சத்தியவாசகம் அவர்களின் நன்றிகூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

o o

23-6-46ல் சன்யாசிநல்லூரில் "இளந்தமிழர் இயக்கக்கூட்டம் தோழர் து. சுப்பராயன் அவர்கள் தலைமையில்கூடியது. தோழர் கலாமணி திராவிட நடிகர் கழகத்தைத் திறந்து வைத்தார். ஜூலை மாதம் பெரியார் ஈ.வெ.ரா. தலைமையில் 9வது ஆண்டுவிழாவும், இரவு இரணியன் அல்லது இணையற்றவீரன் என்ற நாடகத்தையும் நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டது. குடி அரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் அளிக்கப்பட்டது. என்று து. சுப்பராயன் அறிவிக்கின்றார்.

o o

25-6-46 மாலை 5மணிக்கு ஈரோடு திராவிட மாணவர் கழகக் கட்டிடத்தில் ஈரோடு திராவிடர் கழக ஊழியர் தோழர் எ. எஸ். நாராயணசாமி அவர்கள் தலைமையில் மாணவர் கழக 2வது ஆண்டு கமிட்டியில் தோழர்களான சு. அப்பாவு தலைவராகவும், அ. கோவிந்தராசன், அ. அரங்கராசு உபதலைவர்களாகவும், மு. சுப்பையன் காரியதரிசியாகவும், அ. அப்துல்லா உப காரியதரிசியாகவும், பெ. இரா. சீனுவாசன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கோவை மாவட்ட மாணவர் மகாநாடு ஆகஸ்டு இறுதியில் ஈரோட்டில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. சேலம் முனிசிப் தோழர் மல்லநாயக்கர் அவர்கள் அகால மரணத்திற்கு அனுதாபம் காட்டி ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## நீத்தார் நினைவு

சென்னை திவான்மியூர் தோழர் எ. முருகேசன் அவர்கள் மகளும் தோழர் குப்டசாமி அவர்கள் வாழ்க்கைத் துணைவியுமாகிய சாவித்திரியம்மாள் 7-6-46ல் இயற்கையெய்தியதை முன்னிட்டு 21-6-46ல் நீத்தார் நினைவுநாள் நடைபெற்றது. அதன் நினைவாக விடுதலை, குடி அரசு, திராவிடநாடு ஆகிய பத்திரிகைகளுக்கு முறையே ஒவ்வொரு ரூபாய் தோழர் சி. ஜி. எல். ரங்கநாதன் மூலம் நன்கொடையளிக்கப்பட்டது.

# கல்வி நீரோடை

☆

[திராவிடநாட்டில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கம்]

கல்வி நீரோடை, வாழ்க்கைஎனும் வயலை வளமாக்குவது. வாழ்வின் வளம் பெருகவேண்டுமானால், கல்வி நீரோடையின் தயவு வேண்டும். இந்த நீரோடையின் ஆதிக்கத்தை யார் பெற்று இருக்கிறார்களோ, அவர்களுக்கு வாழ்க்கைவளம் ஏற்படுகிறது. ஆரியர் இந்தக் கல்வி நீரோடையைத் தமது ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டுள்ளனர். எனவே அவர்கள் இனத்திலே, வாழ்வு தழைக்கிறது; அந்த நீரோடைக்கு வெகு தொலைவிலே இருப்பதால், தமிழரின் வாழ்வு தற்குறித்தனம் நிரம்பிய தரிசு நிலமாயிருக்கிறது.

பெரியவர்கள், கல்வி நீரோடையின் நிலைபற்றிச் சிந்திக்கத் தவறிவிட்டார்கள். அதனாலேயே நம் இனச் சிறுவர்கள் கல்வித்துறையிலே பிற்போக்கான நிலைபெற்றனர்.

ஏன்? கல்வி நீரோடையின் ஆதிக்கம், வேறு இடத்திலே இருக்கிறது. புள்ளி விவரம் பேசும், கேளுங்கள்.

கடைசியாக வெளிவந்துள்ள 1943—44ம் ஆண்டு சென்னை மாகாணக்கல்வியதிகாரியின் அறிக்கைப்படி, அந்த ஆண்டில் 7கோடி 23லட்சம் ரூபாய் கல்விக்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது. அதில் முதல் நிலை (பிரைமரி) பள்ளிக்கூடங்களுக்கு 3கோடி 14லட்சமும், இடைநிலை (மிடில்) பள்ளிக்கூடங்களுக்கு 17லட்ச ரூபாயும், உயர்தர (ஹைஸ்கூல்) பள்ளிகளுக்கு 1கோடி 26லட்சமுமாகும். பெரும்பாலும் பள்ளிக்கூடங்கள் ஒன்று பிரைமரி, அல்லது ஹைஸ்கூல் ஆக இருப்பதால் மிடில் ஸ்கூல்கள் அதிகம் இல்லாதிருப்பது கவனிக்கத்தக்கது. இந்த மூன்று பகுதிகளிலும் 1வது வகுப்பிலிருந்து 6வது பாரமாகிய எஸ். எஸ். எல். ஸி. வரை கல்வி போதிப்பதாகும். சாதாரணமாக 5வயதிலிருந்து, 16 அல்லது 17வயது வரை படிப்பவர்கள் கல்வி பெறும் இடங்கள். இவைகளேயன்றி, ஹைஸ்கூல் படிப்பிற்கு பின்போ அல்லது அதற்கு ஒத்த முறையிலேயே தொழிற் கல்வியோ அல்லது வேறு ஒரு துறையில் சிறப்புக் கல்வியோ தரும் பள்ளிக்கூடங்களும் உண்டு அவைகளாவன ஆர்ட் ஸ்கூல், மெடிகல் ஸ்கூல், டிரெயினிங் ஸ்கூல், என்ஜினியரிங் ஸ்கூல் போன்றவையாகும். இந்தக் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை ரூ 42,79,474 இந்த 43 லட்சமும் செலவிடப்பட்டுள்ள விதத்தில் நாட்டின் பெருங்குடி மக்களுக்கு விளைந்துள்ள பலனைக் கணக்கிட்டுப் பார்க்கலாம்.

(குறிப்பு:- இந்தத் தொழில்-சிறப்புக் பள்ளிக்கூடங்களாகிய மெடிகல் ஸ்கூல், என்ஜினியரிங் காலேஜ் என்பவைகளுடன் ஒன்றாக வைத்து எண்ணவேண்டாம். இவை குறைந்த படிப்பு கொடுப்பவை; பின் கூறப்பட்டுள்ள கல்லூரிகள் உயர்ந்த படிப்பும். அதற்கான பட்டமும் கொடுப்பவை)

தொழிற்கல்வி—சிறப்புக்கல்வி பள்ளிக்கூடங்கள்.

| | பார்ப்பன மாணவர் | பார்ப்பனரல்லாத மாணவர் |
|---|---|---|
| ஆர்ட் ஸ்கூல் | 71 | 193 |
| மெடிகல் ஸ்கூல் | 211 | 240 |
| டிரெயினிங்ஸ்கூல் | 1633 | 5653 |
| டெக்னிகல் ஸ்கூல் | 494 | 3527 |
| குருடுசெவிடு ஸ்கூல் | 13 | 287 |
| என்ஜினியரிங்ஸ்கூல் | 162 | 76 |
| கமர்சியல் ஸ்கூல் | 3604 | 3104 |
| மற்றப்பள்ளிகள் | 2205 | 1824 |

முன்னதாகக் குறிப்பிட்டபடி இந்தப் பள்ளிக்கூடங்களை அவ்வத்துறைகளில் சிறந்து விளங்குகிற கல்லூரிகளுடன் ஒன்றாக மதிக்கக்கூடாது. உதாரணமாக, டிரெயினிங் ஸ்கூலில் சேர எட்டாவது வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தால் போதும். ஆனால் எல். டி. பட்டம்பெற பி. ஏ. பட்டதாரியாக இருக்கவேண்டும். அத்தகைய கல்லூரிக் கணக்கு வேறிடத்தில் தரப்பட்டுள்ளது; மேலே குறிப்பிட்டக் கணக்கில் திராவிட மாணவர்கள் பார்ப்பன மாணவர்களைவிட 32மடங்கு அதிகமிருக்கிறார்களா என்று கணக்கிட்டுப் பார்க்கவும். பார்க்கும்பொழுது பார்ப்பன இனத்தின் பங்கு பெரும்பகுதியாக உள்ளது என்பது புலப்படும். குறிப்பாகக் கடைசியாகவுள்ள என்ஜினியரிங் ஸ்கூல், கமர்சியல் ஸ்கூல் மற்றப் பள்ளிக்கூடங்களில் 100க்கு 97ஆக உள்ள இனத்தைவிட பார்ப்பனர் எண்ணிக்கையில் அதிகமிருப்பதைக் காணலாம். திராவிட-பார்ப்பன விகிதாச்சாரம் சரியாகமட்டுமல்ல திராவிடர்களுக்கு அதிகமாகவே உள்ள பள்ளிக்கூடமும் ஒன்றிருக்கிறது.

சிறுவயதில் அறியாத பருவத்தில் வறுமையால் தாக்கப்பட்டு, 'பெற்றோரும் பேணுவோருமின்றி வாடும் அனாதைச் சிறுவர்கள் நாட்டிலும் நகரிலும் அநேகர். எலும்பு முறிய வேலைசெய்தும் பசியுடன் போராடும் பகற்பொழுதைப் போக்கிவிட்டு இருளும் குளிரும் மிகுந்த இரவில் தங்களது துன்பத்தைத் தாங்கவைக்க இயலும் இவ்விருண்ட வாழ்வினர் மீது சிலசமயம் சட்டம் பாய்வதுண்டு. 'இவன் ஒரு தேங்காய்த் துண்டைத் திருடினான்" "இவன் திருடியவை ஒரு பிஸ்கோத், இரண்டு வெங்காயம்" என்று குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டு இளம் குற்றவாளிகளெனத் தண்டிக்கப்படும் சிறுவர்களில் சமூகத்தால் பிறப்பிலேயே தள்ளடிக்கப்பட்ட அனாதைச் சிறுவர்களே அதிகம். இத்தகைய இளம் குற்றவாளிகளைத் திருத்துவதற்காக ஏற்பட்டுள்ள "பாஸ்டல்" அல்லது "சர்டிபைட் பள்ளிக்கூடங்கள்" சென்னை மாகாணத்தில் 5 இருக்கின்றன. அவற்றில் அடைத்து வைக்கப்பட்டுள்ள சிறுவர்களில் பார்ப்பனரல்லாதார் 1838; பார்ப்பனர் 35. மக்கள் தொகையில் திராவிடர் பார்ப்பனரைவிட 32 மடங்கு அதிகமென்றாலும் இந்த இருண்ட பள்ளிக்கூடம் ஒன்றில்தான் திராவிடர்களின் தொகை பார்ப்பனரைவிட 53 மடங்கு அதிகம்.

சென்னை மாகாணத்தில் 3பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அவற்றில் மொத்தம் 67 கல்லூரிகள் இருக்கின்றன. இவற்றிற்காக

1943—44ல் செலவு செய்யப்பட்ட தொகை ரூபா 57,57,836. இந்த 58 லட்சரூபாயும் பொதுமக்களின் பணம் என்பதையும், பொதுமக்கள் என்று கூறும்பொழுது 100க்கு 97-பங்கினராகத் திராவிடர்கள் உள்ளனர் என்பதையும் நாம் மறக்கக்கூடாது. கீழே குறிப்பிட்டுள்ள கணக்கில், மாணவர்களின் தொகை இனவாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

| | பார்ப்பன மாணவர் | திராவிட மாணவர் |
|---|---|---|
| இண்டர் மீடியட் | | |
| 1வது வகுப்பு | 3199 | 3601 |
| 2வது வகுப்பு | 2621 | 2537 |
| பி. ஏ. அல்லது பி. ஏ. ஹானர்ஸ் | | |
| 3வது வகுப்பு | 1789 | 1348 |
| 4வது வகுப்பு | 1515 | 1348 |
| 5வது வகுப்பு | 241 | 117 |
| போஸ்ட்கிராஜுவேட் | 103 | 62 |
| மொத்தம் | 9468 | 8928 |

(போஸ்ட் கிராஜுவேட் என்பது பி. ஏ. படித்த மாணவன் எம். ஏ. பட்டம் பெற படிப்பதாகும்)

கல்லூரி என்பது கல்வித்துறையில் தலைசிறந்த இடமாகும். கல்வியெனும் கரும்பை வளர்க்கும் இடங்களாக பள்ளிக்கூடங்களும், கரும்பின் சாற்றைப்பிழிந்தெடுக்குமிடங்களாகக் கல்லூரிகளும் இருக்கின்றன. கல்லூரிகளில் ஒரு சிறுபான்மைக் கூட்டம் மாத்திரம் ஆதிக்கம் செலுத்துவதை ஒழித்து அனைவருக்கும் பயன்படும் அறிவின் ஆய்வுக்கூடமாக அதை ஆக்கவேண்டும்.

வரிசெலுத்துவோரில் நாம் அதிகம். கல்லூரிகளுக்குச் செலவிடப்படும் 58லட்ச ரூபாயில் 56லட்ச ரூபாய் திராவிடர்களால் செலுத்தப்பட்ட வரிப்பணம். இவ்வளவு தொகையையும் உண்டு வாழ்கிற கல்லூரிகளில் நுழைந்து அங்கு படிக்கும் மாணவர்கள் தொகையைப் பார்த்தால், 100க்கு 3ஆக உள்ள இனத்தைப் பின்னுக்குத் தள்ளுகிறது. ஒருவனின் வயற்கரை மற்றவனின் வயலில் ஒரு அங்குலம்கூட நுழைந்துவிட்டால் அதைத் தண்டிக்க சட்டதிட்டங்கள் நாட்டில் இருக்கின்றன; இங்கோ சிறுபான்மையினர் கல்லூரிகளைச் சொந்த வீடுகள்போல ஆட்சிபுரிகின்றனர். படக்கலையை வரவேற்ற நெஞ்சு பகுத்தறிவுக்கொவ்வாத படங்களைப் பார்த்ததும் 'படக்கலையாம் சனியொழிந்தால் போதும்' என நினைப்பதுபோல, கல்லூரிகள் கங்காபுத்திரர்களின் கையில் சிக்கியதைப் பார்க்கும்போது, பூதேவர் பட்டத்தைப் பெற்றவன் பி. ஏ. பட்டத்தைப் பெற்றவுடன் அவனடையும் உருவத்தைக் கண்ணுறும்பொழுது, கல்லூரிகளின்மீது நமக்கு அடங்காத கோபந்தான் உண்டாகிறது. இதுவரை நாமடைந்த துன்பங்கள் இரட்டிக்கின்றன.

முன்னாள் அரசர்கள் சதுர்வேதி மங்கலங்களை அவர்களுக்குத் தானம் செய்தனர். இப்பொழுதுள்ள அரசியலார் சர்வகலாசாலைகளை அவர்களின் உரிமையிடங்களாக முத்திரை பொறித்துவிட்டனர். நிலங்களில் மிராசுதார் உழவர்களின் உணவைப் பறிக்கிறான். கல்வித்துறையில் கங்காபுத்திரர் கல்விச்சாலைகளைத் தங்கள் வசமாக்கிக்கொண்டு மக்களின் உணர்வைப் பறிக்கின்றனர். படிப்பின் காரணமாக, பட்டதாரர்களான கூட்டம் அரசியல் மேடையைத் தனதாக்கிக்கொண்டது. பத்திரிகைப் பலத்தைப்பெற்றது. தன்னினத்திற்கு வேண்டிய வசதிகளைப்பெற ஆங்கிலேயருடன் வாதாடி உரிமை பெற்றது. வாழ்க்கை வசதிகளைப்பெற்றவுடன், அரசியலில் ஆங்கிலேயனுக்கு மிரட்சியை உண்டுபண்ணும் வண்ணம் பலத்தை யடைந்ததும் இப்பொழுது கல்லூரிகளை உண்டாக்கும் திறமையை அடைந்திருக்கிறது. இயந்திர வசதிபெற்ற முதலாளி பலரை ஏழைகளாக்கி, இயந்திரத்தினால் கொடிய பொழுதில் பெரும் பலனை அடைவதுபோல, கல்வி வசதிபெற்ற குருமார் கூட்டம் பெரும்பான்மையான மக்கள் கூட்டத்தை எளிதில் அடக்க முடிகிறது.

பொது மக்களுக்காக ஏற்பட்டுள்ள கல்லூரிகளில் இத்தகைய இழிநிலை. முதல் வகுப்பில் பார்ப்பன மாணவர்களைவிட திராவிட மாணவர்கள் சற்று அதிகம். இரண்டாவது வகுப்பில் பார்ப்பன மாணவர் அதிகம். மேல்வகுப்பில் பார்ப்பனர் தொகையே உயர்கிறது, ஐந்தாவது வகுப்பில் பார்ப்பனர் நம்மைவிட இரண்டு மடங்கு அதிகம். இந்தக் கணக்கில் தாழ்த்தப்பட்டோரின் எண்ணிக்கையைமட்டும் தனியாகப் பார்த்தால் விம்முகிற நெஞ்சின் வேதனை அதிகரிக்கும். தாழ்த்தப்பட்டோரின் தொகை,

| | |
|---|---|
| 1வது வகுப்பில் | 140 |
| 2வது வகுப்பில் | 103 |
| 3வது வகுப்பில் | 52 |
| 4வது வகுப்பில் | 31 |
| 5வது வகுப்பில் | — |
| போஸ்ட் கிராஜுவேட் | — |
| மொத்தம் | 326 |

முன் கொடுக்கப்பட்டுள்ள கணக்குடன் ஒப்பிட்டுப்பாருங்கள். 100க்கு 3உள்ள பார்ப்பனர் எண்ணிக்கையுடன், 100க்கு 16 உள்ள தாழ்த்தப்பட்டோரின் எண்ணிக்கையை சேர்த்துப் பார்க்கக்கூட யோக்கியதை அற்றிருக்கிறது. 81 லட்சம் தாழ்த்தப்பட்டோரில் கல்லூரிகளில் படிப்பவர்கள் 326பேர் அதிலும் வேடிக்கை பி. ஏ. க்கு செல்லுபவர்கள் 83பேர். போஸ்ட்கிராஜுவேட் வகுப்புகளில் 81 லட்சம் பேர்கள்கொண்ட பெருங்குடியினரில் ஒருவர்கூட இல்லை.

உயர்தரக்கல்வியில் நம் நாட்டில் மிகச் சிறப்பு வாய்ந்ததும், விரும்பப்படுவதும் இன்ஜினியரிங், மெடிகல் போன்ற உத்தியோகத்திற்கு பக்குவப்படுத்தும் தொழில் கல்லூரிகளும், குறிப்பிட்டத் துறையில் ஒருவனைப் பழக்குகிற சிறப்புக் கல்லூரிகளுமாகும். 1943—44 அறிக்கைப்படி சென்னை மாகாணத்தில் இவை 15-கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றிற்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 19,18,380 ஆகும். அவைகளில் படிக்கும் மாணவர்களின் தொகை இனவாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | பார்ப்பன மாணவர் | திராவிட மாணவர் |
|---|---|---|
| சட்டக்கல்லூரி | 155 | 202 |
| மெடிகல் ,, | 426 | 676 |
| ஆசிரியர் ,, | 182 | 88 |
| என்ஜினியரிங் ,, | 127 | 205 |
| விவசாயக் ,, | 45 | 55 |
| வெட்டனரி ,, | 61 | 45 |
| டெக்னிகல் ,, | 31 | 7 |

புள்ளி விவரங்களைப் பார்க்கும் பொழுதே இனவாரியான விகிதாச்சாரம் சரியாக அமையவில்லை என்பது நன்றாகப் புலப்படும், 100க்கு 3ஆக உள்ள கூட்டத்திற்கு 100க்கு 40, 50க்கு மேல் இடங்கள் கிடைத்து விடுகின்றன. ஆசிரியர் கல்லூரியில் பார்ப்பனர்" திராவிடரைவிட இரண்டு மடங்குக்குமேல் அதிகம். டெக்னிகல் கல்லூரியில் நான்குமடங்குக்கு மேல் அதிகம். வெட்டனரியிலும் முப்புரிக்கூட்டத்திற்கே முதலிடம்.

தாழ்த்தப்பட்டோர் இந்தக் கல்லூரிகளில் எட்டிப் பார்க்கவேயில்லை. அந்த 18லட்ச மக்களில் ஏதோ தப்பித்தவறி 22பேர் இந்தக் கல்லூரிகளில் இருக்கின்றனர். தாழ்த்தப்பட்டோரில் மெடிகல் கல்லூரியில் 3, என்ஜினியரிங் 5, விவசாயக் கல்லூரி, வெட்னரி, டெக்னிகல் கல்லூரிகளில் ஒருவர்கூட கிடையாது.

கல்விக்காக ஆண்டுதோறும் 6-கோடி, 7கோடிரூபாய் என்று செலவு செய்யப்படுகிறது. அதனால் பலன் என்னவென்று பார்த்தால் 100க்கு 97ஆகவுள்ள திராவிடமாணவர்கள் கல்வித்துறையில் கண்ணுக்கெட்டாத தூரத்தில் இருக்கின்றனர். இதை நாம் புதிதாகக் கண்டுபிடிக்கவில்லை சர்க்காரின் அறிக்கைகள் கூறுவதுதான். ஒன்று கெடுதலைப் பயப்பது என்று தெரிந்திருந்தும் அதையே தொடர்ந்து நடத்துவது பெருங்குற்றமாகும். அதை அரசாங்கம் இன்றுவரை புரிந்து வந்திருக்கிறது. சென்ற சென்சஸ் முடிவுகள் வெளியிடப்பட்டபொழுது, கல்வியறிவு என்ற தலைப்பை எழுதும்பொழுது அதில் "கல்வியறிவில் பார்ப்பனர்கள் மற்ற வகுப்பினரால் எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்கு முன்னேறியுள்ளனர். ஆங்கிலக்கல்வியில் அவர்களது முன்னேற்றம் அபரிமிதமானது" என்று சர்க்கார் குறிப்பு எழுதியுள்ளனர். இதைப் பார்த்தவுடனாவது அரசியலாருக்கு நல்லெண்ணமும் நீதியில் நம்பிக்கையும் இருந்திருந்தால் அவர்கள் கல்வித்துறையில் நடைபெறும் அநீதியை அழித்திருக்க வேண்டும். வரிப்பணத்தை செலுத்துவது நாம் அதன் பலனை அனுபவிக்க இன்னொருகூட்டம்.

கல்வி நீரோடை எல்லோருக்கும் பொதுவானது. குளம் வெட்டுபவர்க்கு குளத்துநீரை உபயோகிக்க முடியாதபடி இருப்பதுபோல, கல்வி நீரோடையைப் பராமரிக்க பொது மக்களனைவரும் வரிப்பணம் செலுத்தியபோதிலும் அதனால் நாட்டு மக்களுக்குப் பயன் விளையவில்லை. சிறுபான்மையினரான பார்ப்பனர் 100-53பேர் கல்வியறிவு பெற்றிருக்க திராவிடர் 100க்கு 8பேருக்குக் குறைவாகவே கல்வி நீரோடை பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் பாய்ந்து மக்கள் மனவளத்தைப் பெருக்கவில்லை. அந்தப் பாய்ச்சலுள்ள பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் பார்ப்பனரின் ஆதிக்க இடங்களாகிவிட்டன. திராவிட இனத்தின் கல்வியறிவு வரண்டபாழ்நிலமாகக் காணப்படும் பொழுது, பார்ப்பனரின் கல்வியறிவு செழித்தோங்கி வளர்ந்துள்ளது. கல்வி நீரோடை கங்காபுத்திரர்களின் கமண்டல நீராக ஆனதைப் பார்க்கும்பொழுது நமக்கும் வேறுவழி தோன்றவில்லை? அந்த ஒரேவழிதான் இருக்கிறது அந்த வழி சென்றால்தான், கல்வி நீரோடை நாடெல்லாம் பாயும்.

## மூடநம்பிக்கை முறியடிக்கப்பட்டது

16-5-46ல் திண்டிவனம்தாலுக்கா கோவடி கிராமத்தில் நடந்த ஐயனாரப்பன் திருவிழாவில், கிராமத்திலுள்ள பெரியவர்களும் வாலிபர்களும் திராவிட கழகத் தோழர்களை, ஐயனாரப்பனுக்கு ஓர் காகம் ஜோடிப்பதாகவும், தெய்வங்களின் கதைகள் வெறும் புனைந்துரை எனக்கூறும் நீங்கள் உங்களில் யாராவது அந்த காகத்தைத் தூக்கிக்கொண்டு ஊரைச்சுற்றிகொண்டுவந்து இறக்கி விடுங்கள் என்று பிடிவாதம் செய்து கேட்டதனால், நமது இயக்கத் தோழரும் திண்டிவனம் தாலுக்கா திராவிட கழக செயற்குழு உறுப்பினருமான என். சேதுராமன் அவர்கள் அந்த காகத்தை சுலபமாக எடுத்து தன் தலைமேல் தாங்கி சுமார் 2½ மணி நேரம்வரை கிராமத்தைச் சுற்றிவந்து கோயிலில் இறக்கிவிட்டார்.

அந்த காகத்தை நீண்ட காலமாக ஜோடிப்பதில்லையென்றும், ஆதியில் குதிரைமீது காகத்தைவைத்து ஊர்வலம் வருவதென்றும், அப்படி வரும்போது குதிரைக்கு கொப்பும் நுரையும் தள்ளி மிகவும் அவஸ்தைப்பட்டுக் கீழே விழுந்துவிடும் என்றும், ஆதலால் அதை யாரும் எடுக்கமுடியாதென்றும், அப்படி யாராவது எடுத்தால் வாயிலும் மூக்கிலும் இரத்தம் வந்து கீழே விழுந்துவிடுவார்கள் என்றும் சொன்னார்கள்;

இந்த மூட நம்பிக்கையை மேற்கண்டவிதம் செய்து உண்மையைத் தெளியவைத்தபின் "ஒழிக மூட நம்பிக்கை! திராவிடநாடு வாழ்க! பெரியார் வாழ்க!,' என்னும் வாழ்த்தொலிகளுடன் கோயிலிலிருந்த கூட்டம் கலைந்தது.

## திருமதி பிரேமா மறைவு

தமிழ்நாடு புரோகித மறுப்புச் சங்கத்தைக் கண்டவரும், செயலாளருமான உறையூர் தோழர் ச. ம. சி. பரமசிவம் அவர்களின் மனைவியார் திருமதி பிரேமா அவர்கள் சில மாத காலங்களாய் நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற மாதம் 1தேதி சனிக்கிழமை மாலை 5மணிக்கு இயற்கையெய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்வதோடு தோழர் ச. ம. சி. பரமசிவம் அவர்களுக்கும் அம்மையாரின் குடும்பத்தினருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## காதணி விழா

10-4-46ல் கரூரை அடுத்த கருப்பம்பாளையத்தில் அ. இ. சுவாமி அவர்கள் தலைமையில் திருச்சி மருத்துவர் சங்க உபதலைவர் க. பிச்சமுத்து அவர்களின் மகன் தங்கத்தம்மாளுக்குக் காதணிவிழா நடத்தப்பட்டது. ரா. ரங்கசாமியவர்கள் சொற்பொழிவாற்றினார். குடியரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

## புதுவீட்டில் குடிபுகுந்தார்

தாரமங்கலம் தோழர் பி. எம். வையாபுரி அவர் புதுவீடுகட்டி, குடிபுகுந்தார். அதன் நினைவாக, குடியரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.